# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார்

வணிக மாத இதழ்

Volume: 12 | Issue : 09 | DECEMBER 2023 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE




**SOURASHTRA CHAMBER OF COMMERCE Office Bearers' met Honorable Union Finance Minister Smt. NIRMALA SITARAMAN on 19.11.2023 at Madurai.**

WISH YOU ALL
HAPPY NEW YEAR
2024

To






அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

METRO

# மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343



TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer :

## Sri Balameenakshi Aqua Pumps

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems

124, West Masi Street, Near Murugan Temple, Madurai - 625 001. Cell : 93616 25696

**H.O. : Madurai Pipes**

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 4378524, Cell : 94437 95317

B.O. : 32A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014. Cell : 99946 57349






Prop.: B.S. Rajan

- CCTV Camera
- Long Distance Monitor
- Security Alarm
- Digital Video Recorder
- Voice Records
- Access Control System
- Firm Alarm
- Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*

## A TO Z CCTV SYSTEMS

CCTV Camera Exclusive Showroom

*Head Office :*
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

*Branch Office :*
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

## உங்கள் உடல் எடையை பராமரிக்க குறைக்க / அதிகரிக்க விரும்புகிறீர்களா?

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

ஆலோசனை பெற அணுகவும்

L.N.R. தாமோதரன் - 98431 71477



# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெ ங்கோ மொன்னு பொறெ*

**நமஸ்கார்...**

T.R.மோகன்ராம்
தலைவர்

ஜனவரி 2024 அன்று நடைபெற இருக்கும் தமிழ்நாடு அரசின் உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024ல் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் மூலம் முதலீடுகளை செய்ய நவம்பர் மாதம் நடைபெற்ற சேம்பர்-ன் செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இதனால், தமிழ்நாடு அரசின் பார்வைக்கு நமது சேம்பருக்கும் ஒரு அங்கீகாரமும், நமது சேம்பர் உறுப்பினர்களுக்கு தங்கள் தொழிலை அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அபிவிருத்தி செய்யவும் ஒரு வாய்ப்பாக அமையும். இதனை கருத்தில் கொண்டு எடுத்த முயற்சிக்கு நமது சேம்பர் அங்கத்தினர்களிடம் இருந்து நல்ல வரவேற்பு கிடைத்தது. அவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் மதுரை மாவட்ட தொழில் மைய அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கு பெரிதும் உதவியாக இருந்த சேம்பர் முன்னாள் தலைவர் திரு. C.K. சேகர் அவர்களுக்கும், சேம்பர் செயற்குழு உறுப்பினரும், அரசு தொடர்புக் குழு சேர்மன் திரு. N.S. பிரேம் குமார் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றுமொரு முக்கிய நிகழ்வாக, பிஎம்-மித்ரா திட்டத்தின் கீழ் சிறிய அளவிலான டெக்ஸ்டைல் பூங்கா அமைப்பதற்கான முயற்சியில் நமது சேம்பர் முனைந்து செயல்பட்டு வருகிறது. இதன் அடுத்தகட்ட முயற்சியாக, 50 ஏக்கர் நிலம் வழங்கக் கோரி மதுரை மாவட்ட ஆட்சியர் திருமதி. சங்கீதா I.A.S., அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் சந்தித்துப் பேசினார்கள். இதற்கு ஆவண செய்வதாக தெரிவித்துள்ளார்.

இது போன்ற முயற்சிகளினால் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் அடுத்தகட்ட வளர்ச்சியை நோக்கி செல்வதைக் காண முடிகிறது.

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ல் உள்ள உறுப்பினர்களின் தொழில் மேம்பாட்டிற்காகவும், நலனுக்காகவும் மடீட்சியா மற்றும் சென்னையில் இயங்கி வரும் டேன்ஸ்டியா அமைப்புகளுடன் இணைந்து செயல்பட திட்டமிட்டுள்ளது. இதன் முதல்முயற்சியாக, மடீட்சியா அமைப்புடன் தற்போது இணைந்து செயல்படத் துவங்கியுள்ளது. இந்த முயற்சிக்கு செயலாற்றி வரும் சேம்பர் முன்னாள் தலைவர் திரு. K.K.G. பிரபாகரன் அவர்களுக்கு நன்றி தெரிவித்தக்கொள்கிறோம்.

வரும் 2024 ஜனவரி மாதம் முதல் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அலுவலகம் மதுரை காமராஜர் சாலையில் அமைந்துள்ள புதுப்பிக்கப்பட்டுள்ள ஆனந்த நிலையம் கட்டிடத்தில் இயங்க இருக்கிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## SOURASHTRA CHAMBER OF COMMERCE
# BOARD OF MEMBERS YEAR 2022-2024

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| T.R. Mohanram | President | 93441 01432 |
| Kumaran B. Jaghuva | Imm. Past President | 99949 26348 |
| K.K. Dinesh | Vice President | 98421 16461 |
| K.K. Kubendran | General Secretary | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | Treasurer | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Joint Secretary | 94439 30728 |
| T.R. Saravanan | Joint Secretary | 92446 84702 |

| EC Members | Team-Chairmen | Contact |
|---|---|---|
| V.G. Ramdoss | International Affairs | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | Administration | 90809 51577 |
| S.G. Srinivasan | Greetings | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Public Relation | 93441 52068 |
| A.R. Ganesan | Cultural & Food | 98421 75804 |
| B.S. Janaarthanan | Members Liason | 97905 75650 |
| G.R. Subramanian | Membership Retain | 94427 52044 |
| T.K. Sivanath Babu | Growth & Development | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | Bulletin | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | Political Affair | 98655 45048 |
| N.S. Prem Kumar | Govt. Relation | 99945 35350 |
| K.K. Dinakaran | Building & Fund Raising | 98409 60833 |
| K.V. Kumaresan | Entertainment | 98940 51735 |
| S.S. Ramsundar | Publicity | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | Social Media | 94422 44648 |
| T.M. Rubesh Babu | Program | 95000 35200 |
| S.S. Premkumar | IT | 96293 42295 |
| S.R. Sundarnath | Community Relation | 92444 03917 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| S.M. Karthi Kumaran | Chairman | 94438 31496 |
| K.B. Sivaprakash Babu | Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | Member | 99524 22260 |



# பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- K.K. சுபேந்திரன்

**19.11.2023** – மதுரைக்கு வருகை தந்திருந்த மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்து கோரிக்கைகளை அளித்தனர். இந்த சந்திப்பிற்கு உதவிய செந்தூர் பேக்ஸ் திருமதி. ஆஷா சுரேஷ் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

**21.11.2023** – சேம்பர்-ன் 13வது செயற்குழு கூட்டம் மாலை 6 மணி அளவில் பெருங்குடியில் உள்ள ஈஸ்வரி ஹாலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சேம்பர் குழுவினர் பலர் கலந்து கொண்டனர்.

**29.11.2023** – உலக முதலீட்டாளர் மாநாடு 2024-ல் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் பங்குகொள்ளவும், அங்கத்தினர்களின் தொழில் வளர்ச்சிக்காகவும், அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான தொழில் வளர்ச்சித் திட்டத்திற்கான முதலீட்டுத் தேவையை அங்கத்தினர்களிடம் இருந்து விண்ணப்பம் பெறப்பட்டது. பெறப்பட்ட ரூ. 140 கோடி மதிப்பிலான முதலீட்டு விண்ணப்பப்படிவத்தை மதுரை மாவட்ட தொழில் மைய உதவி இயக்குநர் திரு. என்.எஸ். கிருஷ்ணன் அவர்களிடம் சேம்பர் நிர்வாகிகள் வழங்கினார்கள்.

**02.12.2023** – ஸௌராஷ்ட்ர சேம்பர் உடன் K.L.N. வித்யாலயா, JCI மதுரை & JCI மதுரை பாண்டியன் இணைந்து Workshop on Empowering Youth என்கிற தலைப்பில் மாணவ / மாணவியரின் தனித்திறன் வளர்ச்சிக்கு சிறப்பு பயிற்சிப் பட்டறையை அன்று K.L.N. வித்யாலயா பள்ளி வளாகத்தில் நடத்தியது. இதில் ஸௌராஷ்ட்ர சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். விளம்பரக் குழு சேர்மன் திரு. S.S. ராம்சுந்தர் &மக்கள் தொடர்பு குழு சேர்மன் திரு. T.N. சூரியபிரகாஷ் ஆகியோர் இணைந்து ஸௌ. சேம்பர் சார்பாக இந்த பயிற்சிப் பட்டறையை ஏற்பாடு செய்தனர்.

**05.12.2023** – டிசம்பர் மாத தொழில் வர்த்தக கூட்டம் மாலை 6.30 மணி அளவில் சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. **Quality Management Practices in Businss** என்கிற தலைப்பில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு Quality Circle Forum of India, Madurai Chapter Dr. R.M. சதீஷ் குமார் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார். இந்தக் கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.



# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- S.M. கார்த்தி குமரன்

## மனித உணர்ச்சிகளை கையாளும் கலை!

குடும்பத்திலோ, தொழிற்சூழலிலோ அல்லது பொது வெளியிலோ சக மனிதர்களிடத்தில் அறிவோடும், பக்குவத்தோடும் செயல்படாமல், சிறு விஷயங்களுக்குக் கூட உணர்ச்சிவசப்பட்டு உறவுகளை இழக்கிறான் மனிதன்.

எந்த ஒரு சூழலையும் அறிவோடு எதிர்கொள்ள வேண்டுமே தவிர உணர்ச்சியை வெளிப்படுத்தினால் எதிர்மறை விளைவுகளோ, தோல்வியையோ சந்திக்க நேரிடும்.

மகாத்மா காந்தி அவர்கள், அணு ஆயுத பலம் கொண்ட வெள்ளையர்களை அறிவென்னும் ஆயுத பலத்தால் எதிர்கொண்டதன் விளைவே நம் இந்திய தேசத்திற்கு சுதந்திரம் கிடைத்தது.

வெள்ளையர்களின் கொடுங்கோல் ஆட்சியின் மேல் கோபம் கொண்டு வன்முறையில் இறங்கியிருந்தால் நாட்டுக்கு சுதந்திரம் தான் கிடைத்திருக்குமா?. காந்திக்கு மகாத்மா பட்டம் தான் கிடைத்திருக்குமா? அவரும் சாதாரண மனிதர்களைப் போல் அல்லவா கருதப்பட்டிருந்திருப்பார்.

ஆனால், அவர் தனது கோபத்தை அறிவென்னும் ஆயுதத்தால் மடைமாற்றம் செய்து செயல்பட்டார். அஹிம்சை வழியைத் தேர்ந்தெடுத்து கோபத்தை வெளிக்காட்டினார். வெள்ளையர்களும் சுமூகமான முறையில் வெளியேறினர்.

ஒருவர் நம்மிடம் நேரடியாக உணர்ச்சிவசத்துடன் நடந்துகொண்டால் பதிலுக்கு நீங்களும் நேரடியாக உணர்ச்சியை வெளிப்படுத்தாதீர்கள். காலத்திற்கும் தீர்வு கிடைக்காது. ஒருவருக்கொருவர் எதிரிகளாகவே இருக்க நேரிடும். உங்கள் பதிலடியை சுய விழிப்புடன் அறிவின் துணையுடன் மடைமாற்றம் செய்து புரிந்து செயல்படுங்கள். விளைவுகள் எந்த மன முறிவும் இல்லாமல் இரு தரப்பிற்கும் ஆரோக்கியமாக அமையும்.

## இடம் மாற்றம்

வரும் ஜனவரி 2024
முதல் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அலுவலகம்
கீழ்க்கண்ட முகவரியில் இயங்கும் என்பதை தெரிவித்தக்கொள்கிறோம்

**புதிய முகவரி** 161F – சாலை பிள்ளையார் கோவில் தெரு,
காமராஜர் சாலை, அருணாச்சலம் மலாம்பாள் அரங்கம் அருகில்,
மதுரை – 625009




*Best Compliments from*

# BVK GROUP

Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation

BVK GROUP

4th Floor (NW), Kothari Building, 114, M.G. Road, Nungambakkam, Chennai - 600 034.
No.603, Keshava - BKC, Mumbai - 400 051.

# மத்திய நிதி அமைச்சர் அவர்களை சந்தித்த சேம்பர் நிர்வாகிகள்

## மொழிவாரி சிறுபான்மை தொழில்முனைவோர்களுக்கு சலுகைகள் வழங்க கோரிக்கை





மதுரைக்கு வருகை தந்திருந்த மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு. நிர்மலா சீதாராமன் அவர்களை 19.11.2023 அன்று நமது ஸௌராஷ்ட்ரா சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் நேரில் சந்தித்தனர்.

இந்த சந்திப்பில், ஜி.எஸ்.டி. குறித்த குறைகள், தொழில் வாய்ப்புகள் மற்றும் மொழிவாரி சிறுபான்மை தொழில்முனைவோர்களுக்கு சலுகைகள் குறித்த கோரிக்கைகள் தெரிவிக்கப்பட்டன. கோரிக்கைகளை எழுத்துப்பூர்வமாக தமக்கே அளிக்கும்படியும், தாம் உரிய துறையினருக்கு அனுப்பி தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வதாகத் தெரிவித்தது மிகவும் மகிழ்ச்சியளித்தது.

---

# தமிழ்நாட்டின் உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024ல் நமது சேம்பர்-ன் பங்களிப்பு



கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் 13வது செயற்குழு கூட்டத்தில், தமிழ்நாடு அரசின் உலக முதலீட்டார்கள் மாநாடு 2024ல் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதற்காகவும், தொழில் முனைவோர்களின் வளர்ச்சிக்காகவும், நமது சேம்பர்-ல் உள்ள ஆர்வமுள்ள உறுப்பினர் பெருமக்களை ஒன்றிணைத்து ரூ. 100 கோடிக்கு மேல் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் மூலம் முதலீடு செய்ய திட்டமிடப்பட்டது. அடுத்த 3 ஆண்டுகளுக்கு புதிய தொழில் துவங்க, தொழில் விரிவாக்கம் செய்ய விரும்புவோர் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே, சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும் வாட்ஸ்ஆப் மூலம் விண்ணப்பம் அனுப்பப்பட்டது. ஆர்வமுள்ள பல அங்கத்தினர்கள் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அனுப்பினர். இதன்மூலம் ரூ. 120 கோடிக்கு மேல் முதலீடுகள் & விரிவாக்கத் தேவைக்காக உரிய விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அனுப்பியிருந்தனர். அதனை, மதுரை மாவட்ட தொழில் மைய உதவி இயக்குநர் திரு. என்.எஸ். கிருஷ்ணன் அவர்களை சேம்பர் நிர்வாகிகள் நேரில் சென்று சந்தித்து வழங்கினார்கள். மேலும், இதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்துள்ளோம்.


**Sowndarya Traders**

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733

*Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary*



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

# ENERGY BAR

ADISHTU

## FLAVOURS

THAT

## IDEAL FOR

Health Conscious
Fitness Enthusiasts
Kids
Diabetic friendly food






NO Added Preservative
NO Added Sugar
NO Artificial Sweeteners
NO Added Chemicals
NO Artificial Flavour
NO Dairy, Soy, Gluten

adishtu
www.adishtu.com



# சேம்பர்–ன் டிசம்பர் மாத தொழில் வர்த்தக கூட்டம்

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்–ன் டிசம்பர் மாத தொழில் வர்த்தக கூட்டம் **Quality Management Practices in Businss** என்கிற தலைப்பில் 05.12.2023 அன்ற சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு சிறப்ப விருந்தினராக Quality Circle Forum of India, Madurai Chapter Dr. R.M. சதீஷ் குமார் அவர்கள் கலந்து கொண்டு பேசினார். சேம்பர் தலைவர் திரு.T.R. மோகன்ராம் அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் நன்றி தெரிவித்தார்.



இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர் திரு. பிரபு அவர்கள் கூறியதாவது, இந்த கூட்டத்தில் சிறப்பு விருந்தினர் ஆற்றிய உரையில், உற்பத்தித் தொழில் செய்பவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. தொழிலில் லாபம் பெற பல அருமையான யோசனைகளை நமக்கு வழங்கினார். உற்பத்தி, உற்பத்தித் திறன் ஆகியவற்றைப் பற்றி எளிமையான முறையில் பேசினார். Lead Time, Circle Time ஆகியவற்றின் முக்கியத்துவம் அதை தொழிலில் பயன்படுத்தி முன்னேற எடுத்துரைத்தார். முக்கியமாக Wastage-களை குறைப்பதன் மூலம் நம் தொழிலில் லாபத்தைப் பெற முடியும் என்பதையும் திரு. சதீஷ் அவர்கள் அருமையாக விளக்கினார்.




படம்: விழா மலர் வெளியீடும் நிகழ்வு

ஸௌராஷ்ட்ர பெண்கள் வித்யா சங்கத்தின் பவள விழா மதுரை காந்தி N.M.R. சுப்பராமன் பெண்கள் கல்லூரி வளாகத்தில் 12.12.2023 அன்று நடைபெற்றது. கல்லூரி தலைவர் திரு. M.K. ஜவகர்பாபு அவர்கள் தலைமைத் தாங்கினார். பா.ஜ. தேசிய செயற்குழு உறுப்பினர் திருமதி. A.R. மகாலட்சுமி மற்றும் முன்னாள் M.L.A. திரு. S.S. சரவணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஹலோ FM Radio ஜாக்கி செல்வகீதா மாணவிகளிடம் சிறப்புரையாற்றினார். விழாவில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பொருளாளர் ஷோபனா நன்றி கூறினார்.

மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி அவர்கள் கலந்துகொண்டு N.M.R. வித்யா மந்திர் CBSE பள்ளிக்கான தொடக்க விழா கல்வெட்டையும் திறந்து வைத்தார். பள்ளி & கல்லூரி தாளாளர் திருமதி. M.V. ஜனரஞ்ஜனிபாய் அவர்களின் 50 ஆண்டுகால கல்விச் சேவையைப் பாராட்டி ”வித்யா கலா சேவா பிரவீனா” விருதும், ஸௌராஷ்ட்ரா பெண்கள் வித்யா சங்கத் தலைவர் திரு. M.K. ஜவகர்பாபு அவர்களுக்கு ”வித்யா சேவா விபூசன்” விருதும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் தெற்கு மண்டல தலைவர் முகேஷ் சர்மா, கவுன்சிலர் செந்தாமரை கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். பவள விழாவை முன்னிட்டு சென்னையில் புயலால் ஏற்பட்ட பாதிப்புக்கு நிவாரணமாக ரூ. 10 லட்சம் வழங்க இருப்பதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இந்த விழாவில் சமூக முக்கிய பிரமுகர்கள், அனைத்து சமூக அமைப்புகள், நம் ஸௌராஷ்ட்ர சேம்பர் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.






இடமிருந்து வலம்: செயற்குழு உறுப்பினர்கள் திரு. S.G. ஸ்ரீநிவாசன், திரு. T.N. சூரியபிரகாஷ்
பொதுச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன், ஜஸ்டிசன்ஸ் ஆசிரியர் திரு. ராமஈஸ்வர்லால்
லாப் ஸமாச்சார் இதழ் ஆசிரியர் திரு. S.M. கார்த்தி குமரன், துணைத்தலைவர் திரு. K.K. தினேஷ்
மற்றும் இதழ் குழு உறுப்பினர் திரு. K.B. சிவப்பிரகாஷ் பாபு

சென்ற நவம்பர் மாத லாப் ஸமாச்சார் தொழில் வர்த்தக இதழை
நம் சமூகத்தின் முக்கியப் பத்திரிக்கையான ஜஸ்டிசன் ஆட் பேஜ்
இதழின் ஆசிரியர் திரு. ராம ஈஸ்வர்லால் அவர்களின் கரங்களால்
20.11.2023 அன்று சேமபர் அலுவலகத்தில் வெளியீடு செய்யப்பட்டது.
மதுரைக்கு வருகை தந்த அவரை, இதழ் குழு உறுப்பினர்கள்
நமது சேம்பர் அலுவலகத்திற்கு வரவேற்று மரியாதை செய்தனர்.
இதன் தொடர்ச்சியாக, நவம்பர் மாத இதழ் வெளியீடு செய்யப்பட்டது.
இதழ், பல்வேறு தகவல்களை உள்ளடக்கி வெளி வருவதாகவும்.
நம் சமூகத்திற்கு தொழில் சார்ந்த தகவல்களைக் கொண்ட ஒரே இதழ்
லாப் ஸமாச்சார் என்று பாராட்டிப் பேசினார்.



ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் உடன் K.L.N. வித்யாலயா, JCI மதுரை &
JCI மதுரை பாண்டியன் இணைந்து Workshop on Empowering Youth என்கிற தலைப்பில்
மாணவ / மாணவியரின் தனித்திறன் வளர்ச்சிக்கு சிறப்பு பயிற்சிப் பட்டறையை
02.12.2023 அன்று K.L.N. வித்யாலயா பள்ளி வளாகத்தில் நடத்தியது.
Jc. T.S. தினேஷ் குமார், Jc. R. நாகேந்திரன், Jc. N. பிரசன்னா & Jc. B.S. அருண்
ஆகியோர் மாணவ / மாணவியர்களுக்கு பயிற்சிப் பட்டறையை நடத்திச் சென்றனர்.
இதில் ஸௌராஷ்ட்ர சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.
விளம்பரக் குழு சேர்மன் திரு. S.S. ராம்சுந்தர் &
மக்கள் தொடர்பு குழு சேர்மன் திரு. T.N. சூரியபிரகாஷ் ஆகியோர் இணைந்து
ஸௌ. சேம்பர் சார்பாக இந்த பயிற்சிப் பட்டறையை ஏற்பாடு செய்தனர்.




ஸௌராஷ்ட்ர ஸ்போர்ட்ஸ் அகாடமி சார்பில் 03.12.2023 அன்று
ஸௌராஷ்ட்ர ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட
ஸௌராஷ்ட்ர ஸ்போர்ட்ஸ் தின்னாள் 2023 நிகழ்ச்சியில்,
நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் கலந்து கொண்டு
வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கியது.
இந்த நிகழ்வில், 5 வயது முதல் 80 வயது வரையிலான
குழந்தைகள், பெண்கள், ஆண்கள் பலர் போட்டியில் கலந்து கொண்டனர்.



பிஎம்-மித்ரா திட்டத்தின் கீழ் தனியார் சிறிய டெக்ஸ்டைல் பூங்கா அமைக்கக் கோரி
டெக்ஸ்டைல் ஆணையர் திரு. வள்ளலார் I.A.S., அவர்களுக்கு கடிதம் அனுப்பியதுடன்,
நேரிலும் நமது சேம்பர் நிர்வாகிகள் சந்தித்துப் பேசியிருந்தனர்.
இதன் அடுத்தக்கட்ட முயற்சியாக, இந்தத் திட்டத்திற்கு 50 ஏக்கர் நிலம் வழங்க கோரி
ஸௌராஷ்ட்ர சேம்பர், மடீட்சியா & கப்பலூர் தொழிற்பேட்டை நிர்வாகிகள் இணைந்து
மதுரை மாவட்ட ஆட்சியர் திருமதி. எம்.எஸ். சங்கீதா I.A.S., அவர்களை,
11.12.2023 அன்று நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.


ஸ்ரீ முருகன் துணை
K.S. மோகன்லால்





98430 72626
98425 72626
ஹரிலால்
பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்
குறிப்பிட்ட நேரத்தில்
டெலிவரி செய்யப்படும்
* செங்கல்
* மணல்
* ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
* கிராவல்
* கிரஷர் தூசி
* சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
* உடைகல்
No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை – 9

# How to Start Selling Online

Before you begin setting up an online store, be sure to have these steps completed.

**1. Conduct market research :** The beauty of ecommerce is that anyone anywhere can join in on the action. Whether you're a small business owner or part of a large enterprise, there are endless opportunities to go digital with your business and get a piece of the pie.

However, with this low barrier of entry also comes a saturated market — and a great way to stand out is to find your niche.

Before brainstorming your product, think about which markets are already competitive and which markets have the potential for growth. Consider what markets where you already have a presence or a passion, and go from there. Utilize tools like Google Trends or Google Ads Keyword Planner to see what products and services are trending and how big the market is for your niche.

Then, once you know your target market, it's time to determine what value you can offer in your market. Are customers willing to buy your product or service? How much are they willing to pay?

This is the time to dig deep into market research by studying your competitors, surveying your audience and gauging the right price point for your product or service.

**2. Choose what products to sell :** After you've honed your research and landed on a market, it's time to build your product. This is one of the most — if not the most — crucial step in the process, as every other aspect of your business revolves around what you're selling.

Just as it's important to choose a niche market, it's also a good idea to narrow down to a niche product. This can help reduce the competition and give you more opportunity for growth.

For example, a sportswear brand would likely face harsh competition from bigger, more established brands. However, by niching down to a specific type of product or sport, such as swimwear or running shoes, you may find it easier to position yourself in the market and invest more time and energy into your product.

**3. Identify your target audience :** You may have a stellar product, but it'll do you no good if you're selling it to the wrong people. In fact, $37 billion is wasted in ad spend each year from ads that fail to engage the target audience.

But by having a comprehensive understanding of your target audience, you'll be able to make more informed decisions about marketing and advertising, leading to more customers and more money.

Follow these steps to help identify your customer base and segment your audiences:

- **Survey potential customers:** How old are they? Where do they live? What is their annual income?
- **Identify industry trends:** Look for similar products on the market to see how other companies are marketing themselves, and identify what makes you stand out.
- **Analyze competitors:** How are your biggest competitors selling online? What are they doing that works and doesn't work?
- **Build buyer personas:** Gather data and conduct surveys to give you a more comprehensive picture of your ideal buyer. This will help you hone in on specific customer segments of your target market.

**4. Conduct ecommerce platform research :** Before building your online store, you'll want to do some research on what kind of ecommerce platform you'd like to sell on, whether it be your own online store, Amazon, eBay, Facebook or any other online marketplace.

Luckily, there is a plethora of SaaS ecommerce platforms on the market that allow merchants to sell products online for a set monthly fee, regardless of how technically skilled you are. Or, if you have the coding experience, you can go the open-source route and build your online store from scratch.

**5. Create product content :** Unless you're a well-established business, chances are you won't have a photographer, copywriter or social media manager on hand, especially if your business is just taking off. As a small business owner, you're likely wearing many of these hats yourself. If so, here are a couple things to keep in mind.

- **Images:** Make sure all imagery and product photography is high-quality and aligns with your brand image. Utilize professional product photos if your supplier offers them, or go the DIY route and shoot your own product photos — a smart phone and good lighting can go a long way.
- **Product descriptions:** Keep your product descriptions brief, yet thorough and creative. Choose engaging, descriptive language and don't be afraid to have some fun with it! Plus, try offering free or discounted products to help encourage customer reviews and testimonials.

**6. Build your online store :** Now that you have your product, target market and content, you're ready to start building your online store. Don't worry if you don't have the technical expertise to build a website from scratch — many e-commerce platforms allow you to create a beautiful online store without writing a single line of code. With SaaS platforms like Big Commerce, you'll have all the tools you need to design your online storefront, upload your product catalog and successfully market your brand.

If you're feeling overwhelmed by the number of e-commerce platforms to choose from, just remember that there is no one-size-fits-all e-commerce website builder. Every platform has its own benefits and drawbacks, and the best thing you can do is choose the solution that best suits your needs.

**7. Promote and market your store :** Finally, you'll need to create a strategy to market to your potential customers and start driving traffic to your store. The best way to promote your brand is by taking an omnichannel approach and marketing across a variety of offline and online sales channels. Here are just a few to consider:

- Social media.
- Google advertising.
- Influencer marketing.
- Events.
- Facebook Pages and Groups.
- Discounts and promotions.
- Email marketing.
- Content marketing.
- Word-of-mouth.

# 2ம் மற்றும் 3ம் தர நகரங்களுக்கு படையெடுக்கும் டெக் மற்றும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள்

## மதுரையிலும் வருகிறது தொழில் வாய்ப்புகள்

தமிழ்நாட்டின் வர்த்தகம், வேலைவாய்ப்பு, முதலீடு அனைத்தும் பெரும்பாலான காலக்கட்டத்தில் சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளை மட்டுமே சார்ந்து இருந்த காலக்கட்டம் மறைந்து மாநிலத்தின் வளர்ச்சி வேகத்தை மேம்படுத்தப் பல மாவட்டங்களை முக்கிய இலக்காகக் கொண்டு வளர்ச்சித் திட்டங்களையும், முதலீடுகளையும் ஈர்க்கப்பட்டு வருகிறது. சொல்லப்போனால் இந்த டிரெண்ட் தமிழ்நாட்டில் மட்டும் அல்லாமல் இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்களில் உள்ளது. இது லாக்டவுன் காலத்தில் மிகவும் சீரியஸாக மாறியது.

டெக் நிறுவனங்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் முதல் GCC வரையிலான பல துறை சேர்ந்த நிறுவனங்கள் 2ம் மற்றும் 3ம் தர நகரங்களுக்குப் படையெடுத்து வருகிறது. 2ம் மற்றும் 3ம் தர நகரங்களில் கடந்த சில வருடங்களாக உருவான உள்கட்டமைப்பு வளர்ச்சி, திறன்கள், ஸ்டார்ட்அப் சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் அரசின் புதிய முயற்சிகளால் தூண்டப்பட்டுச் சிறப்பான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இந்த நிலையில், Deloitte மற்றும் Nasscom அமைப்பு நாட்டில் டெக் ஹப்-களாக வேகமாக வளர்ச்சி அடையும் 26 இரண்டாம் தர நகரங்களின் பட்டியலை வெளியிட்டு உள்ளது. இதில் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாட்டில் மட்டும் 4 நகரங்கள் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன. பிற மாநிலங்களில் பெரும்பான்மையாக 1,2 நகரங்களும், ஒரு சில மாநிலங்களில் 3 நகரங்கள் மட்டுமே பட்டியலிடப்பட்டு உள்ளது.

Deloitte மற்றும் Nasscom அமைப்பின் ஆய்வுகளின்படி தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகியவை டெக்-ஹப்களாக மாறி வருகிறது. பொதுவாக டெக் நிறுவனங்கள் பெரிய நகரங்களை விடுத்து சிறிய நகரங்களுக்கு வர முக்கியமான காரணம் பணம் மட்டுமே.

பெரு நகரங்களைக் காட்டிலும் சிறு நகரங்கள் சம்பள செலவுகள் கிட்டத்தட்ட 25% - 30% குறைவாகவும், பெரு நகரங்களை ஒப்பிடும்போது ரியல் எஸ்டேட் வாடகையில் 50% செலவு குறைவாக இருக்கிறது. மேலும் வளர்ந்து வரும் 26 தொழில்நுட்ப மையங்கள், உலகளாவிய டிஜிட்டல் சேவையின் தேவையைப் பூர்த்தி செய்வது மட்டும் அல்லாமல் இந்தியாவின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறது என Deloitte மற்றும் Nasscom அமைப்பின் ஆய்வுகள் கூறிகிறது.

தற்போது, இந்தியாவின் 11% - 15% தொழில்நுட்ப திறமைகள் பெற்றவர்கள் 2ம் மற்றும் 3ம் தர நகரங்களில் உள்ளனர். இந்தியாவில் பொறியியல், கலை மற்றும் அறிவியலில் பட்டம் பெற்றவர்களில் 60% பேர் சிறிய நகரங்களில் உள்ளதாக அறிக்கை குறிப்பிடுகிறது. 2ம் மற்றும் 3ம் அதர நகரங்களில் தற்போது 140க்கும் மேற்பட்ட உலகளாவிய திறன் மையங்களை (GCCs) அமைத்துள்ளது.

மேலும் நாட்டின் 2ம் தர நகரங்கள் இன்னோவேஷன்-களுக்கு முக்கியத் தளமாக மாறிவிட்டன. நாட்டின் மொத்த ஸ்டார்ட்அப்களில் சுமார் 39% ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், கிட்டத்தட்ட 7000 அதிகமான ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் 2ம் தர நகரங்களில் Deep Tech முதல் BPM வரையிலான பல துறையில் பரந்து விரிந்து உள்ளது.

# நெகிழிக் கழிவுகளில் இருந்து ஹைட்ரஜன்

ஹைட்ரஜன் வாயு மிகச் சிறந்த எரிபொருள். புதைபடிவ எரிபொருட்களைவிட அதிகளவு ஆற்றலைத் தரவல்லது.

மின்சாரம் தயாரிக்கவும், வாகனங்களை இயக்கவும் இதை பயன்படுத்த முடியும். தற்போது நமக்குத் தேவையான 95 சதவீத ஹைட்ரஜன் "ஸ்டீம் - மீத்தேன்" முறையில் தான் தயாரிக்கப்படுகிறது. இந்த முறையில் 1 டன் ஹைட்ரஜனை உருவாக்கும்போது 11 டன் கரியமில வாயு வெளியாகிறது. இது சுற்றுச்சூழலுக்குக் கடும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இந்நிலையில், அமெரிக்காவின் ரைஸ் பல்கலை, நெகிழி கழிவுகளில் இருந்து ஹைட்ரஜன் எடுக்கும் முறையைக் கண்டறிந்துள்ளது.

இந்த முறையில், நெகிழிக் கழிவுகளைச் சுத்தம் செய்ய வேண்டியதில்லை. அதை நேரடியாக 2826 டிகிரி செல்ஷியஸ் வெப்பத்திற்குச் சூடாக்குவர். இந்தக் கடும் வெப்பத்தில் நெகிழியில் உள்ள ஹைட்ரஜன் முழுவதும் ஆவியாகிவிடும். அதைத் தனியாக சேகரித்துவிடுவர். கிரஃபின் மட்டும் மிஞ்சி இருக்கும். இது மின்னணுக் கருவிகளில் பயன்படும் ஒரு முக்கியப் பொருள் இந்த முறையில் ஹைட்ரஜன் தயாரித்தால் நெகிழியால் உருவாகும் சுற்றுச்சூழல் கேட்டைத் தடுக்க முடியும். விரைவில் இம்முறை மேம்படுத்தப்பட்டு பயன்பாட்டிற்கு வர உள்ளது.



# List of Traffic Fines for Different Violations in India

